# நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

## கொழும்பு துறைமுக நகர அபிவிருத்திக் கருத்திட்டம்

## கருத்திட்ட முகாமைத்துவ அலகு (PMU)
## வெற்றிடம்

**01. <u>கருத்திட்டம் பற்றிய விபரம் :</u>**

கொழும்பு துறைமுக நகரம் என்பது இலங்கையின் மத்திய வர்த்தக மாவட்டமான கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ள மனங்கவர் வணிக நகரமான கொழும்பு நகரை விஸ்தரித்து அபிவிருத்தி செய்யப்பட்ட புதிய நகரமொன்றாகும். கரையோரத்திலிருந்து கடல் நோக்கியதாக 269 ஹெக்டயார் நிலப்பரப்பு வரை பரந்து காணப்படுகின்ற கொழும்பு துறைமுக நகரம் இந்து சமுத்திரத்திர பிராந்தியத்தில் அமைந்துள்ள சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட நகர்ப்புற வாழ்க்கை முறைக்கான வசதிகளை செய்துகொடுத்து, தெற்காசியாவின் முன்னோடி வதிவிட, வர்த்தக மற்றும் வியாபார பயண முடிவாக அமையும். இந்த துறைமுக நகரம் தொடர்பில் இலங்கை அரசுக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை ஒருங்கிணைப்புச் செய்தல், முகாமைத்துவம், அவதானிப்புச் செய்தல் மற்றும் கண்காணிப்புச் செய்வதற்காக அமைச்சினால் கருத்திட்ட முகாமைத்துவ அலகு தாபிக்கப்பட்டுள்ளது.

**02. <u>நிரப்பப்படவுள்ள பதவி வெற்றிடங்கள்:</u>**

| தொடர் இல. | பதவி | சுற்றறிக்கை இலக்கம் 10/2035 இற்கமைய சம்பள வகுதி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | சாரதி | PL 3 – 2025 தரம் III | 02 |

**03. <u>விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான நிபந்தனைகள்:</u>**

**பொதுவான நிபந்தனைகள்**

(1) (i) ஆட்சேர்ப்புச் செய்யப்படும் தரம் : தரம் III

(ii) ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகைமைகள் :

- விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் திகதிக்கு 18 வயதுக்கு மேற்பட்டவராகவும், 45 வயதுக்கு குறைவானவராகவும், இலங்கைப் பிரசையாகவும் இருத்தல் வேண்டும்.

(iii) கல்வித் தகைமைகள்

- கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத வகையில் ஆகக் குறைந்தது சிங்களம் / தமிழ் மொழி உள்ளடங்களாக இரண்டு (02) திறமைச் சித்திகளுடன், ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

(iv) தொழில்சார் தகைமைகள்

- ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளுத் திகதிக்கு மூன்று (03) வருடங்களுக்கு முன்னர் குறைந்தபட்சம் சீ மற்றும் சீ1 வாகன வகுப்புக்களுக்கு உரித்தான சாரதி அனுமதிப்பத்திரம் அல்லது புதிய சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு அமைய பீ வகுப்பைச் சேர்ந்த சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- வீதிச் சட்டங்கள் பற்றிய கோவை தொடர்பில் சிறந்த அறிவைப் பெற்றிருத்தல்.

**04. சம்பள அளவுத்திட்டம் :**

01. சேவை வகுதி : சாரதி சேவை

02. சம்பளக் குறியீடு : PL 3 – 2025 தரம் III

03. சம்பள அளவுத்திட்டம் : ரூபா 42,780 – 10 x 490 – 10 x 540 – 10 x 590 – 12 x 630 = ரூபா 66,540 ஆகும்.

04. தரம் : தரம் III

**05. விண்ணப்பித்தல் :**

02/2026

தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரிகள் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 01/2026 இன் 2:3:3 பந்தியின் (ஆ) இற்கமைய விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன், அரச / அரசசார்பற்ற நிறுவனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை தமது நிறுவனத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், அரச சேவையில் இல்லாத விண்ணப்பதாரிகள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

விண்ணப்பதாரியின் தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி (இருப்பின்) தகைமைகள், அனுபவம் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட தகவல்களை உள்ளடக்கியதாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தைப் பயன்படுத்தி தயார் செய்து 2026/04/22 **2026.03.31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர்** கீழே குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

**மின்னஞ்சல் முகவரி:** psportcity@gmail.com